

# லூர்து அகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்த்து அகம்



## திருமதி இராயப்பு லூர்துநாயகி

அவர்கள் அமரராகிய 31வது நாள்

# நினைவுமலர்

24.06.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி இராயப்பு லூர்துநாயகி

மண்ணில்
28.11.1949

விண்ணில்
25.05.2010

நீ தெய்வமாகினாய் நாம் தொழுவதற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

## கண்ணீர்த்துளிகளின் அஞ்சலி



*அம்மா!*
உணர்வாய் உயிராய் உடலாய் இணைந்து
உள்ளத்தில் நிறைந்து நின்றீர்
கண்ணாய் கருத்தாய் கடமையாய் காத்து
கவலையை மறக்கச் செய்தீர்
அன்பாய் பண்பாய் அணையாய் அணைத்து
அயலவர் போற்றிட வாழ்ந்தீர்

**இன்றோ!**
எண்ணாத நிலையில் ஏற்பட்ட நோயே
எமக்கென உம்மை இல்லை என்றாச்சு
கண்ணீரில் வாழ கவலையில் ஆழ்த்தி
கரைந்திட்ட எங்கள் குடும்ப விளக்கே
எண்ணமே உமதாகிட உந்தன் பாதங்களில்
எங்கள் கண்ணீர்த் துளிகளின் அஞ்சலி

**உறவுகள்**

*24.06.2010*

*"சிறுநண்டு கரைமீதில் படமொன்று கீறும்*
*சிலவேளை அதை வந்த கடல்கொண்டுபோகும்"*

ஜெயந்த் சென்ரர், மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலங்காதே நான் என்றும் உன்னோடு

## தொடக்க ஜெபம்

இயேசு என்கிற பரிசுத்த நாமமே, வல்லமையுள்ள நாமமே, ஆசீர்வதிக்கிற நாமமே, அற்புதங்கள் செய்கின்ற நாமமே, உம்மை நான் ஆராதிக்கிறேன். விசுவசிக்கிறேன். உம்மை மகிமைப்படுத்துகிறேன். இயேசுவின் நாமத்தினாலே நான் சுகம் பெற்றுக்கொள்கிறேன். இயேசுவின் நாமத்தினாலே நான் பலம் அடைகிறேன். இயேசுவின் நாமத்தினாலே நான் வெற்றி பெறுகிறேன். இயேசு என்கிற நாமமே என்னை அபிஷேகியும். எனக்குள் இருக்கும் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பும். இயேசு என்னும் நாமத்தின் பிரசன்னம் எனக்குள் இறங்குவதாக, அபிஷேகம் செய்வதாக, அல்லேலூயா.



இயேசு என்னும் நாமமே நீரே என் வாழ்வு என் உயிர்மூச்சு என் ஆதாரம். என் சமாதானம், என் வழமை, என் எதிர்காலம், என்னைப்பாதுகாக்கும் அரணும், கேடயமும் நான் ஊன்றி நிற்கும் பாறையும் நீரே. என் வெற்றியும் மகிழ்வும் நீரே.

இயேசு என்னும் நாமமே என்னை சூழ்ந்து கொள்ளும். என்னுள்ளிருந்து ஜீவ நீரூற்றுகள் புறப்படச் செய்யும் அல்லேலூயா.

(துதிக்கவும்).

## இயேசுவின் பெயரால் ஜெபம்

இயேசு என்கிற வல்லமையுள்ள நாமத்தை என் உடலுக்குள் அனுப்பி செபிக்கிறேன். சுகப்படுத்துகிற இயேசுவின் பெயரை என் மூளைக்குள்ளும் அதன் இயக்கங்களுக்குள்ளும் அனுப்பிச் செபிக்கிறேன். இயேசு என்கிற பெயரை என் உடலில் உள்ள எல்லா எலும்புகளுக்குள், முதுகுத் தண்டு வடத்திற்குள், இடுப்பு பகுதிக்குள், எலும்பு மூட்டுக்கள், கிண்ணங்கள், தசைகள், தசைநார்கள், தோல், நரம்பு மண்டலங்களுக்குள் அனுப்பி செபிக்கிறேன். என் இதயத்தின் ஒவ்வொரு துடிப்புக்குள்ளும், நுரையீரலின் ஒவ்வொரு துடிப்புக்குள்ளும், (சுருங்கி விரிதலுக்குள்) இயேசு என்கிற அபிஷேகிக்கிற பெயரை அனுப்பி செபிக்கிறேன். என் உடலில் ஒடுகிற ஒவ்வொரு இரத்தத் துளிக்குள்ளும், நான் சுவாசிக்கும் காற்றின் அணுக்களுக்குள்ளும் இயேசுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரை அனுப்பிச் செபிக்கிறேன். நான் உண்ணுகிற உணவு, குடிக்கிற நீர் மற்றும் பானங்கள் நான் பார்க்கிற ஒவ்வொரு காட்சிக்குள்ளும், பொருட்களுக் குள்ளும், நபர்களுக்குள்ளும், நான் கேட்கிற ஒலிகள், இசை, வார்த்தைகளுக் குள். என் உணர்வுகளுக்குள், என் வாயின் வார்த்தைகளுக்கு இயேசு என்கிற பெயரை அனுப்பி செபிக்கிறேன். அல்லேலூயா.

இயேசு என்கிற பரிசுத்த பெயரை என் மனத்திற்குள் அனுப்பி செபிக்கிறேன். என் மனதின் ஆழ்நிலைகளுக்குள், அதன் காயங்களுக்குள், ஒருமனப்படமுடியாத அலைக்கழிப்புக்குள் விடுவிக்கிற, அபிஷேகிக்கிற, இயேசு என்கிற பெயரை அனுப்பி செபிக்கிறேன். இயேசு என்கிற பெயரை மனதின் அமுக்கப்பட்ட உணர்வுகளுக்குள், சோர்வுகளுக்குள், ஏக்கங்களுக்குள், மற்றும் குற்ற உணர்வுகள் காயப்படுத்தப்பட்ட குற்றப்படுத்தப்பட்ட நிலைகளுக்குள், நம்பிக்கையற்ற நிலைகளுக்குள் இயேசுவின் பெயரை அனுப்பி செபிக்கிறேன். இயேசு என்கிற பெயரை என் கோப உணர்வுகள், வெறுப்பு, ஏற்றுக்கொள்ள முடியாத நிலைகள், குழப்பமான, முடிவெடுக்க முடியாத நிலைகள் இவற்றுக்குள் அனுப்பி செபிக்கிறேன். மனதின் எல்லா பரபரப்பான நினைவுகள், வீண் கவலைகள், சந்தேகமான எதிர்மறையான நிலைகளுக்குள்ளாக அனுப்பி செபிக்கிறேன்.



என் வாழ்வின் கடந்த காலங்கள், நிகழ்காலங்கள், எதிர்காலங்களுக் குள் இயேசு என்கிற உமது பெயரை அனுப்பி செபிக்கிறேன். என் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களாக இருக்க வேண்டியவைகள் மாறுபட்டு காணப்படுகிற நிலைகள், அறிந்து கொள்ள முடியாத கட்டப்பட்ட நிலைகள், மறைக்கப்பட்ட நிலைகள் இவைகளுக்குள் ஒளியூட்டுகிற, இயேசுவின் பெயரை அனுப்பி செபிக்கிறேன். என் கடந்த கால வாழ்வின் கசப்புகள், வேதனைகள், தெய்வத்தை பற்றிய அறிவும் அபிஷேகமும் இல்லாததால் நான் இழந்துபோன ஆசீர்வாதங்கள், இவைகளுக்காக இயேசுவின் பெயரை அனுப்பி செபிக்கி றேன். என் நிகழ்காலத்தின் எல்லா தேவைகளுக்குள்ளும், வாழ்வின் நிலைக ளுக்குள்ளும் இயேசு என்கிற உமது பெயரை அனுப்பி செபிக்கிறேன். அல்லேலூயா.

எனக்குள் இருக்கிற எல்லா பிரச்சினைகளுக்குள்ளும், நானே அறிந்துகொள்ள முடியாத கேள்விகளுக்குள்ளும், இயேசு என்கிற பெயரை அனுப்பி செபிக்கிறேன். எனது பரிசுத்தமற்ற நிலைகள், அங்கீகாரம் தேடுகிற நிலைகள் இவைகளுக்குள் இயேசு என்கிற பெயரை அனுப்பி செபிக்கிறேன். எனக்கென்று தெய்வம் தந்திருக்கிற எல்லா உறவுகளுக்குள்ளும் இயேசுவின் பெயரை அனுப்பி செபிக்கிறேன்.

இயேசு என்கிற நாமத்தை என்னால் முடியவே முடியாது என நினைக்கிற எனது நிறைவேறாத ஆசைகளுக்குள்ளாக அனுப்புகிறேன். பரிசுத்த ஆவியின் வரங்களால் என்னை நிரப்பி என்னுடைய எல்லா பலவீனங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்ற இயேசு என்கிற நாமத்தை என் உள்ளத்திற்குள் அனுப்புகிறேன். ஆவி, மனம், ஆன்மா, வாழ்வு, எதிர்காலம், அழைப்பு பணிகள், திறமைகள், படிப்பு, பலன்கள், எண்ணங்கள், கற்பனைகள், பயணங்கள், வேலைகள், பொருளாதாரம், வீடு, சொத்துக்கள், எனது குடும்பம், நண்பர் மற்றும் உறவினர்கள் மீதும் இயேசு என்கிற நாமத்தை ஒரு முத்திரையாக வைக்கிறேன். இயேசு நாமம் என்னை பரிசுத்தப்படுத்துவதாக, இயேசுவின் நாமம் என்னை முழுமையாக்குவதாக, அல்லேலூயா.

அன்பு, பாசம், பரிவு, அங்கீகாரம் மற்றும் எனது எல்லா உறவுகள் மூலமாக பிசாசு எனக்கு வைக்கிற எல்லா கண்ணிகளிலிருந்தும் என்னை விடுவிக்க இயேசுவின் நாமத்தை அனுப்புகிறேன். எனக்கெதிராக என்னை கட்ட அனுப்பட்ட எல்லா ஏவல், பில்லி, சூனிய, மந்திரவாத கட்டுக்கள் மற்றும் தீய ஆவிகளுக்குள் இயேசுவின் பரிசுத்த நாமத்தை அனுப்புகிறேன். எனக்குள்ளாக இயேசுவின் நாமத்தை அனுப்பி எல்லா தீமைகளுக்கெதிரான மிக வலிமையுள்ள பாதுகாப்பாக எடுத்துக் கொள்கிறேன்.

நிலம், நீர், காற்று, ஆகாயம் மற்றும் என்னை சுற்றியுள்ள வான் மண்டலங்களுக்குள்ளாக இயேசுவின் நாமத்தை அனுப்புகிறேன். இவற்றின் மூலமாக எனக்குள் எந்த தீமையும் நுழையாதபடி இயேசுவின் நாமத்தை அனுப்பி செபிக்கிறேன். இயேசுவின் பரிசுத்த நாமம் என்னுள் மகிமை அடைவதாக. ஆமென்!



இயேசுவின் பெயரால் நான் புதுப்படைப்பாகின்றேன். இயேசுவின் பெயருக்கு என்னை அடிமைப்படுத்தி. ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென்! அல்லேலூயா!

## இயேசுவின் இரத்தத்தால் நம்மை கழுவும் ஜெபம்

இயேசுவே எங்களுக்காக கல்வாரியில் நீர் சிந்திய உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் எங்கள் குடும்பத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரையும் கழுவும், எங்கள் வீடுகளில் இருக்கிற ஒவ்வொரு பொருட்களிலும் உம்முடைய இரத்தத்தை தெளியும் எங்கள் வீடுகளைச் சுற்றிலும் நிலங்களின் எல்லைகளைச் சுற்றிலும் உம்முடைய இரத்தத்தை தெளித்து வைத்து உமது காவல் தூதர்களை எங்களுக்குத் துணையாக நிறுத்தி வையும்.

எங்களுக்கு எதிராக செய்யப்படுகின்ற எந்தவொரு காரியமாக இருந்தாலும் மாய மந்திர சக்திகள், சாத்தானின், ஏவுதல்கள், பில்லி, சூனியக் கட்டுக்கள் மற்றும் ஆபத்துக்கள், விபத்துக்கள், அவமானங்கள், நோய்கள் பிற தேவைகள் அனைத்திலும் எங்களைப் பாதுகாத்து வழிநடத்தும். நாங்கள் செல்லுகின்ற வழிகளெல்லாம் சென்றடைகின்ற ஒவ்வாரு இடங்களெல்லாம் உம்முடைய இரத்தத் துளிகளைத் தெளித்து வைத்து எங்களுக்கு முன்னும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னும் வலமும், இடமும உமது பிரசன்னத்தால் வழி நடத்தும். இதுவரை எங்களைப் பாதுகாத்து வந்த தேவன் இனிவரும் நாட்களிலும் எங்களைப் பாதுகாத்து வழி நடத்தும்படி ஜெபிக்கின்றோம். ஆமென்.

### உத்தரிப்பு ஆத்துமாக்களுக்குச் ஜெபம்

என்றும் வாழும் தந்தாய்! உமது தெய்வ மகனாகிய இயேசுவின் விலைமதிப்பற்ற திரு உதிரத்தை, இன்று உலகெங்கிலும் செலுத்தப்படும் திருப்பலியோடு ஒன்றித்து உத்தரிக்கும் ஆன்மாக்கள் அனைவருக்காகவும், உலகெங்குமுள்ள பாவிகளுக்காகவும், அகில திருச்சபையிலுள்ள பாவிகளுக்காகவும், எனது இல்லத்திலும் குடும்பத்திலுமுள்ள பாவிகளுக்காகவும் உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.

### குடும்பத்தை ஒப்புக்கொடுக்கும் ஜெபம்

நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம். (யோசுவா 24:21)

இரக்கத்தின் அரசராகிய யேசுவே இதுவரை எங்கள் குடும்பத்திற்காக செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நன்றி கூறுகின்றேன். இந்த அதிகாலை வேளையிலே எங்கள் குடும்பத்தை உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறேன். இன்றைய நாளிலே உமது அன்பின் பிரசன்னத்தை எங்கள்மேல் பொழிந்தருளும். நாங்கள் உமக்கு எதிராக சிந்தனையாலும், செயலாலும், கடமையில் தவறியதாலும் செய்த குற்றங்களை மன்னித்து எங்களை ஆசீர்வதித்தருளும்.



கர்த்தாவே இன்றைய நாளிலே என்னையும் என் வீட்டையும், வீட்டில் உள்ள அனைவரையும், ஏனைய உயிரினங்களையும், எல்லா பொருள் பண்டங்களையும், செய்யவிருக்கும் பயணங்களையும், தொழில்துறைகளையும் உம்மிடம் ஒப்புக்கொடுக்கின்றேன். எல்லாவற்றையும் நீரே பொறுப்பெடுத்துக் கொள்ளும். யாருக்கும் எந்த ஆபத்தோ, நோய்களோ, வாதைகளோ, வராமலும் பாவங்கள் தீமைகள் அணுகாமலும் பொருட்களுக்கு நஷ்டங்கள் வராமலும் காத்துக்கொள்ளும். உமது அக்கினி வேலியால் என் வீட்டையும் என் வீட்டின் எல்லைகளையும் சுற்றி வேலி அடைத்தருளும். உமது பரிசுத்த சேனைகள் இவ்விடத்தில் பாளையம் இறங்கிப் பாதுகாக்க வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

இரக்கமுள்ள இயேசுவே என் குடும்பம் உம்மால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாகவும், ஒவ்வொரு நாளும் உமது அன்பில் நிறைந்து, பரிசுத்தத்தில் வளரும் குடும்பமாகவும் மாற்றியருளும். குடும்பத்தின் தேவைகளை இன்று சந்தித்தருளும். எல்லாத் தடைகளையும் ஆசீர்வாதமாக மாற்றியருளும். உமது அற்புதங்களையும், அதிசயங்களையும் எங்கள் கண்கள் காணச்செய்தருளும். அஞ்சாதே நான் உன் தேவன் என்ற வாக்குறுதிக்கேற்ப இன்று சகலவித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்களில் இருந்தும் என்னையும் என் வீட்டாரையும் விலக்கிக் காத்தருளும்.

சாத்தானின் சோதனைகளை வெற்றி கொள்ளவும் மன அமைதியுடன் வாழவும் துணை புரிந்தருளும். இக் குடும்பத்தின் தலைவராக நீரே இருந்து செபத்திலும் இறை வார்த்தையாலும் வழி நடத்தியருளும். உமது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் இன்றைய நாளிலே என்னையும் என் குடும்பத்தினரையும் நிரப்பியருளும். ஆமென்.

இயேசுவுக்கே புகழ்!

மரியே வாழ்க!

## தூய ஆவியை நோக்கிச் ஜெபம்

தூய ஆவியே! என் ஆருயிரே, உம்மை ஆராதிக்கின்றேன், என்னில் ஒளியேற்றி என்னை வழிநடத்தும், எனக்கு திடமளித்து என்னைத் தேற்றும், நான் செய்யவேண்டியதை சொல்லும், ஆணையிடும், உமது திட்டத்தை எனக்குத் தெரியப்படுத்தினால் போதும். எனக்கு நடக்க வேண்டுமென்று நீர் விரும்புவதை நான் அன்புடன் ஏற்று அடிபணிகின்றேன். ஆமென்.

## வல்லமை மிக்க இயேசுவின் திருநாம தியான செபம்



அல்லேலூயா- 3
இயேசுவே வாரும் - 3
இயேசுவே என்னில் நிலைத்திடும் -3
இயேசுவே என்னோடு பேசும் -3
இயேசுவே உமக்கு நன்றி -3
இயேசுவே உமக்கு புகழ் -3
இயேசுவே உமக்கு ஆராதனை -3
இயேசுவே என் இறைவன்
இயேசுவே என் ஆண்டவர்
இயேசுவே என் மீட்பர்
இயேசுவே என் அரசன்
இயேசுவே என் ஆயன்
இயேசுவே என் தலைவன்
இயேசுவே என் தந்தை
இயேசுவே என் தாய்
இயேசுவே என் சகோதரன்
இயேசுவே என் நண்பன்
இயேசுவே என் மருத்துவர்
இயேசுவே என் அரண்
இயேசுவே என் பாறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவே என் பாதுகாவல்
இயேசுவே என் ஆலோசகர்
இயேசுவே என் வாழ்வு
இயேசுவே என் வழி
இயேசுவே என் ஒளி
இயேசுவே என் மொழி
இயேசுவே என் நம்பிக்கை
இயேசுவே என் துணை
இயேசுவே என் மூச்சு
இயேசுவே என் பேச்சு
இயேசுவே என் உணவு
இயேசுவே என் பானம்
இயேசுவே என் சொத்து
இயேசுவே என் ஆற்றல்
இயேசுவே என் ஆறுதல்
இயேசுவே என் அறிவு
இயேசுவே என் ஞானம்
இயேசுவே என் மகிழ்வு
இயேசுவே என் நிறைவு
இயேசுவே என் துணிவு
இயேசுவே என் கதி
இயேசுவே என் வெற்றி
இயேசுவே என் சக்தி
இயேசுவே என் கலைஞன்
இயேசுவே என் துவக்கம்
இயேசுவே என் முடிவு
இயேசுவே என் எல்லாம் -3
இயேசுவே என் அருளும் -3
இயேசுவே உமது ஆவியை அருளும் -3
இயேசுவே அமைதி அருளும் - 3
அல்லேலூயா - 3
இயேசுவே வாரும் - 3
இயேசுவே என்னில் ஐக்கியமாகும் - 3
இயேசுவே என்னோடு பேசும் - 3
இயேசுவே பேசும் -3
அல்லேலூயா - 3





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் செபமாலை

**ஆரம்பச் செபம்**

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே! உமது பாதத்தண்டையில் சாஸ்டாங்கமாக விழுந்து கிடக்கின்றோம். உமது துன்பமும் நோக்காடு மிக்க உமது சிலுவையின் பாதையிலே, உள்ளார்ந்த இரக்கத்துடன் கூடிய அன்போடு உம்மை பின்தொடர்ந்து, சென்ற உமது தாயாரின் கண்ணீரை உமக்கு ஒப்புக் கொடுக்கின் றோம். ஓ! நல்ல எசமானே! உமது அதி பரிசுத்த தாயாரின் கண்ணீர் கற்பிக்கும் பாடங்களை எமது உள்ளங்களில் பதியச்செய்தருளும். அதனால் நாம் இவ்வுலகில் உமது திருச்சித்ததை நிறைவேற்றவும், உம்மைப் பரலோகத்தில் என்றென்றும் போற்றிப் புகழவும் வரம் பெறுவோமாக. - ஆமென்



**பெரிய மணியில்:**

ஓ! இயேசுவே! இவ்வுலகில் உம்மை அதிஉயர்ந்த விதமாய் அன்பு செய்தவரும் இப்போது பரலோகத்தில் உம்மைக் கனிவோடு அன்பு செய்பவருமான உமது திருத்தாயாரின் கண்ணீரைக் கருணையுடன் நோக்கியருளும்.

**சிறிய மணியில்:**

ஓ! இயேசுவே! உமது அன்பு மிக்க திருத்தாயாரின் இரத்தக் கண்ணீரைப் பார்த்து எமது விண்ணப்பங்களைக் கேட்டருளும்.

**முடிவில்**

ஓ! மரியாயே! அன்பு மிக்க தாயே! துயரமும், இரக்கமும் மிகுந்த அம்மா! எமது செபங்களை உம்முடைய செபங்களோடு இணைத்து உமது திருமகனிடம் ஒப்படைத்தருளும். அவரை நோக்கி நாங்கள் எமது உள்ளங்களைத் திரும்புகின்றோம். உமது கண்ணீரைப் பார்த்து எமது செபங்களைக் கனிவுடன் ஏற்றுக்கொள்வாராக. நாங்கள் கேட்கும் வரங்களைத் தந்து எமக்கு நித்திய பேரின்ப மகிமையைத் தந்தருள் வாராக. ஆமென்.

ஓ! வியாகுலம் நிறைந்த தாயே! உமது கண்ணீர் சாத்தானின் ஆதிக்கத்தை அழிப்பதாக. எல்லாம் வல்ல அன்பு இயேசுவே! உமது தெய்வீக கருணையினால் உலகை இன்று பயங்கரத்துள்ளாக்கும் தவறுகளிலிருந்து பாதுகாப்பீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழந்தை இயேசுவுக்கு நவநாள்

## ஆரம்பச் செபம்

ஓ! பேரன்புக்குரிய இயேசுவே! கருணையோடு நேசிப்பவரே! எங்கள் மத்தியில் வாழ்வதிலும் உமது ஆசிர்வாதத்தைப் பொழிவதிலுமே நீர் பெரு மகிழ்வுஎய்துகின்றீர். அடியேன் தகுதியற்றவனாயிருந்தும் என்னை அன்போடு அணைத்து கருணையோடு மன்னித்து என்மேல் உமது முழு வல்லமையையும் செலுத்துவதால் ஓ.. அன்பான குழந்தை இயேசுவே. உம்மிடத்தில் ஈர்க்கப்பட்டவனாய் நிற்கிறேன்.



தேவரீரிடம் முழு விசுவாசத்துடன் வந்த அனேகர் தமது விண்ணப்பங்கள் அருளப்பட்டிருக்கிறார்கள். உமது பீடத்தின் புதுமைமிக்க உமது திருச் சுரூபத்தின் முன் பக்தியோடு முழந்தாழில் நின்று என் இதயத்தைத் திறந்து எனது மன்றாட்டுக்களையும் விண்ணப்பங்களையும் நம்பிக்கையேடு சமர்ப்பிக்கின்றேன்.

எனது முக்கியமான பிரச்சனைகளை உமது கனிவான இதயத்திலே ஒப்படைக்கின்றேன். உமது பரிசுத்த சித்தத்திலும் ஞானத்திலும் அன்பிலும் எல்லா நியமமும் நன்மைக்கே என்பதால் என்னை ஆண்டு வழிநடத்தும்.

முழு வல்லமையுள்ள கிருபை மிக குழந்தை இயேசுவே! எம்மைப் புறக்கணியாமல் எங்களைப் பாதுகாத்து என்றென்றைக்கும் ஆசீர்வதித்தருளும்.

இனிமையிலும் இனிய குழந்தை இயேசுவே! மிக்க கருணையோடும் மென்மையோடும் உம்மைக் கருத்தாய்ப் பேணிக்காத்த திருநிறை அன்னை மரியாளின் பெயராலும் மிகுந்த பயபக்தியோடு தமது கரங்களில் உம்மை ஏந்திய புனித சூசையப்பரின் பெயராலும் அடியேனை ஆறுதல் படுத்தி மகிழ்வுறச் செய்யும். அதனால் அடியேன் உருகும் என் இதயத்தினால் தேவரீருக்கு நன்றி செலுத்தி என்றென்றும் மகிமைப்படுத்துவேன். ஆமென்.

## நவநாள் செபம்

கேளுங்கள் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் திறக்கப்படும். என்று திருவாய் மலர்ந்தருளிய இயேசுவே. உமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தாயார் அதிபரிசுத்த மரியன்னை வழியாக அடியேன் தட்டுகிறேன். என் மன்றாட்டைக் கேட்டருளும்.

*(தேவையைக் குறிப்பிடவும்)*

என் நாமத்தினால் என் பிதாவிடம் கேட்பதெல்லாம் உங்களுக்குத் தரப்படும் என்று திருவாக்களித்த மதுரமான இயேசுவே. உமது திருத்தாயார் அதிபரிசுத்த மரியன்னை வழியாக அடியேன் தாழ்ச்சியோடு இந்த அவசரமான எனது தேவையைத் தந்தருளுமாறு உமது பெயரால் பிதாவிடம் கேட்கிறேன்.

*(தேவையைக் குறிப்பிடவும்)*

வானமும் பூமியும் ஒழிந்துபோகும். ஆனால் என் வார்த்தைகளோ அழிந்துபோகா என்று திருவுளம்பற்றிய அன்பான இயேசுவே! உமது திருத்தாயார் அதிபரிசுத்த மரியன்னை வழியாக என் மன்றாட்டு நிச்சயமாகக் கேட்டருளப்படும் என்று நம்பிக்கையோடு விசுவசிக்கின்றேன்.

*(தேவையைக் குறிப்பிடவும்)*



## குழந்தை இயேசுவின் அருளால் கிடைக்கப்பெற்ற நன்மைகளுக்காக நன்றிச் செபம்

ஓ! கிருபை மிக குழந்தை இயேசுவே! உமது திருச் சுரூபத்தின் முன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அடியேனுக்கு அருளிச்செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்துகின்றேன் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத உமது இரக்கப் பெருக்கத்தை இடையறாது புகழ்ந்துபாடி. தேவரீர் ஒருவர் தாமே எனது கடவுள் எனது உதவியாளன். எனது பாதுகாவலன் என அறிக்கையிடுவேன். இனிமேல் உம்மிடத்தில் முற்று முழுதாக நம்பிக்கை வைக்கிறேன்.

தேவரீருடைய புதுமைமிகு திருச் சுரூபத்தின் வழியாக தேவரீர் காட்டிவரும் இரக்கத்தையும் தாராள மனத்தையும் அதனால் கிடைக்கும் அன்பையும் அளவற்ற ஆசீரையும் ஆர்ப்பரிப்போடு அடியேன் ஒலிக்கச்செய்து எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் செய்வேனாக.

எல்லா கிறீஸ்தவர்களுடைய இதயத்திலும் தேவரீருடைய பரிசுத்த பாலத்துவம் பல்கிப் பெருகுவதாக.

தேவரீருடைய உதவியைப்பெறும் யாவரும் அடியேனோடு சேர்ந்து குறைவற்ற நன்றிப் பெருக்கத்தை காட்டுவதற்கு அயராமுயற்சி எடுப்போமாக.

புகழும் மகிமையும் என்றென்றும் உமக்கே உரியதாக. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவின் திருத்தோள்

## திருத்தோள் காயத்தின் செபம்

என் நேசத்துக்குரிய இயேசுவே! கடவுளின் மாசற்ற செம்மறிப் புருவையே! நான் மிகவும் நிர்ப்பாக்கிய பாவியானாலும், நீர் உமது பாரமான சிலுவையை சுமந்துகொண்டு போனபோது உமது திருத்தோளை நிஸ்டூரமாய் கிழியச்செய்த, உமது திருச்சரீரத்தில் உண்டான சகல காயங்களால் நீர் அனுபவித்த துரயத்தைப் பார்க்கிலும் அதிக துயரத்தை வருவித்த உமது திருத்தோளின் காயத்தை சாஸ்டாங்கமாய் வணங்கி நமஸ்கரிக்கிறேன். மட்டற்ற துயரப்பட்ட இயேசுவே உம்மை ஆராதித்து, என் முழு இருதயத்தோடு உம்மைப் புகழ்ந்து, ஸ்துதித்து உமது திருத்தோளின் கடூர காயத்திற்காக உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் சொல்லுகிறேன்.



நீர் அனுபவித்த இந்த மட்டற்ற வேதனை உமது சிலுவையின் பாரச்சுமையால் அதிகரித்ததன்மேல் நான் நொந்தழுது, பாவியாகிய என்பேரில் தேவரீர் இரக்கமாயிருக்கவும், என் பாவ அக்கிரமங்களைப் பொறுத்து உமது சிலுவையின் பாதையின் வழியாய் என்னை மோட்சபாக்கியம் சேர்ப்பிக்கவும் தயைபுரிய வேண்டுமென்று உம்மை இரந்து மன்றாடுகின்றேன். ஆமேன்.

மதுர இயேசுவே! உமது திருத்தோளின் கடூர காயத்தைப் பார்த்து உத்தரிக்கின்ற ஸ்தலத்து ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும்.

(1 பர. 1 அருள். 1 திரி.)

*மதுரமான யேசுவே! ஆறுதல் அளிக்கும் கர்த்தாவே! இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் உமக்கு இயல்பாமே. இவ்வுலக வாழ்விலிருந்து உமது சன்னிதானம் அழைத்துக்கொண்ட உமது மகளாகிய,*

***திருமதி இராயப்பு லூர்துநாயகி***

*அவர்களின் பாவங்களை உமது திரு இரத்தத்தால் கழுவி, உமது பேரின்ப வீட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சில் நிழலாடும் நினைவுகள்

## அமரர் இராயப்பு லூர்துநாயகி அவர்களின் வாழ்க்கை வரலாறு



கடலின் அலைகள் முத்தமிடும் குருநகரில், ஆசீர்வாதம் றோமான் - மனவல் யோசேப்பின் தம்பதியினருக்கு நான்காவது வாரிசாக 1949.11.28 ஆம் நாள் பிறந்தார். திருமதி யூடா இமைக்குலற், கிறிஸ்ரியன், காலம்சென்ற ஜெயரெட்ணசிங்கம் ஆகியோருக்கு அருமைத் தங்கையாகவும், கில்பேட், றிச்சட் ஒலிவர், காலஞ்சென்ற அன்ரனி (கிராம சேவையாளர்), திருமதி பீலீக்ஸ் ஜெயசீலி, ஸ்ரனிஸ்லோஸ், டயஸ் ஆகியோருக்கு ஆசை அக்காவாகவும் விளங்கினார். பெரிய குடும்பமாக இருந்தபடியால் படிப்பதில் ஆர்வம் இருந்தும், குடும்ப நிலைமையை உணர்ந்து, படிப்பை இடையில் நிறுத்திவிட்டு தாயாருக்கு உதவியாக வாழ்ந்து வந்தார். அன்றே தியாக வாழ்வை முன்னிறுத்தி முதன்மைப்படுத்தி வாழ்ந்ததனால்தான் பின்னாளில் சகோதரர் களால் தெய்வமெனப் போற்றப்படக் காரணமானார்.

உரிய வயதில் திருமண பந்தத்தில் இணைந்தார். இதே குருநகரைச் சேர்ந்த மரியான் குருசுமுத்து - அன்ரனிப்பிள்ளை சிசிலியா தம்பதியினரின் மகனான இராயப்பு (கலையார்வன்) அவர்களை 16.09.1976 இல் தனது வாழ்க்கைத் துணையாக ஏற்று, இனிதே இல்லறம் நடத்தி ஜெயேந்திரன், ஜெயப்பிரகாஸ் ஆகிய புதல்வர்களையும் ஜெயந்தினி, என்னும் புதல்வியையும் பெற்றெடுத்தார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கணவர் வெளிநாடு சென்று வாழ்ந்த போதும் அவர் கலங்கிட வில்லை, உள்ளம் சோர்ந்திடவில்லை, உறுதி குலைந்திடவில்லை. பதியிடம் கற்றுத்தேர்ந்த பாடங்களின் பிரதியீடாக பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிலும், பக்தியிலும் ஊட்டி வளர்த்து நற்பிள்ளைகளாக் கினார். கணவரின் துணையோடு மூத்த மகனை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். இளைய மகனை இந்தியாவுக்கு அனுப்பி படிக்கவைத்தார். பிள்ளைகள் இருவருக்கு சிறப்புடன் திருமணத்தை நிகழ்த்தி வைத்தார்.

மூத்த மகனுக்கு முத்தான மருமகளாக அல்போன்ஸ் ஹமன்சியும், மகளுக்கு பண்பான மருமகனாக தார்சீசியஸ் வியன் விமலானந்தும் அமைந்தனர். அவர்களுடைய செழிப் பான வாழ்வு கண்டு மகிழ்வோடு வாழ்ந்து வந்தார்.

ஆலயத்தின் கடமைகளையும், ஆலயத்துக்கான உதவி களையும் தவறாமல் நிறைவேற்றி வந்தார். சகோதர சகோதரிக ளோடும், அயலவர்களோடும் மிகவும் பாசத்துடன் பழகி மகிழ்வார், எவருடனும் கோபப்படாமல் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார். எவர் எதுகேட்டாலும் முகங்கோணாமல் உதவிசெய்வார். இந்த தயாளகுணம் இயற்கையிலேயே அமைப் பெற்றது என்றே சொல்லவேண்டும்.

மணமான காலம் முதல் தன் கணவன் குடும்பப் பொறுப் புகளை செவ்வனே நிறைவேற்றாமலிருந்து சமூகத்திற்குத் தார்மீக சேவையாற்றுவதை அறிந்திருந்தும் அதை ஒருபோதும் தடுத்தவ ரில்லை. மேலும் ஊக்கப்படுத்தினார், ஒத்துழைப்பு வழங்கினார்.



"அல்லைப்பிட்டியில் குருநகர் மக்களுக்கான வீடுகள் அமைக்கும் திட்டப் பணியில் இராயப்பு கணிசமான நேரத்தைச் செலவழித்துச் சேவையாற்றுவதற்கு மனைவி லூர்துநாயகியின் ஒத்துழைப்பே காரணம். அந்தவகையில் அவரும் இந்த வீட்டுத் திட்டப் பணியில் பங்காளராகிறார். அவரின் இந்தப் பணி போற்றுதற்குரியது. இன்று எம்மைவிட்டுப் பிரிந்த லூர்துநாயகி யின் முன்மாதிரிகையை ஒவ்வொரு பெண்களும் பின்பற்றி தங்களது கணவன்மாரும் சமூப்பணியாற்ற ஊக்கப்படுத்தவேண் டும்" என அருள்திரு அ. பி. ஜெயசேகரம் அடிகளார் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நிகழ்ந்த இறுதிச்சடங்கு வழிபாட்டில் (29.05.2010) ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இப்படியான ஒரு குணவதியின் வாழ்வில் இறைவனின் அழைப்பு நோய் வடிவில் புகுந்து, நினைத்தேயிருக்காத வகையில் அவர் உயிரை 25.05.2010 இல் கவர்ந்து சென்றுவிட்டது.

இறைவன் தனக்குத் தேவையென்று அழைத்துக் கொண்டார். அவரை, அவர் தனது வலப்பக்கத்தில் வைத்துப் பாதுகாப்பார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெக்குருகும் நெஞ்சங்கள்

## தன்னிறுதிவரை...

அம்மா!
என்னைத் தவிக்கவிட்டு ஏனோ
விண்ணகம் சென்று விட்டாய்
உன்னில் பாதியென்னை ஏனோ
ஊனமாய் உலவிட செய்தாய்



எந்தன் வாழ்வில் ஒளியானாய்
எனக் கிசைந்த மனைவியானாய்
எந்தன் கண்ணின் மணியானாய்
ஏனோ தவிக்கவிட்டு நீசென்றாய்

தாயாகி என்னைத் தாங்கினாய்
சேயாகி குதூகலித்து முகிழ்த்தாய்
மனையாளாய் மகிழ வைத்தாய்
மனையின்றோ தன்நிலை குலைந்து...

மண்ணில் எனக்கேது மனித
மாண்புமிகு வாழ்வு இனிமேல்.
உன்னிடம் என்னைச் சேர்ப்பதற்கு
உரிய நாளினை பெற்றுத்தாம்மா

காணும் பொருள்களில் உன்முகம்
கணமதில் மறையுதே நில்லாமல்
எண்ணும் எண்ணங்களில் உன்னகம்
எளிதினில் ஆகுதே கானல்நீராக

ஒரு தடவையேனும் உன்னுடல்
துன்பப்பட நான் நடந்ததில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பப்பட்டாய் இறுதியில் நோயால்
நானடைந்த துயரினை யாரறிவார்?

பொறுமைக்கு பூமியை ஒப்பிடுவர்
பொய்யே என்பேன், என்மனையாளின்
பொறுமை பூமியையும் மிஞ்சும்
பழகிப் பார்த்தவர்க்கது தெரியும்.

தன்பிள்ளைகளைப் பற்றிச் சிந்தியாது
தன்னிறுதிவரை தன்கூடவேயிருந்த
தன்தம்பி பிள்ளைகளையே சிந்தித்த
தயாளகுணம் அவளுக்கன்றி எவருக்குவரும்.

**மீளாத்துயரில்**
**கணவன்**

---

## எழுந்து வாராயோ



***அம்மா!***
விளையாட்டாய் எதையுமே எதிர்கொள்வாய் - விதி
துளைபோட்டு அழைக்குமென யார் கண்டார்
அழைத்தபோது அருகிருந்தோம் நாமெல்லாம் - இறைவன்
அழைப்பை தடுத்திட முடியவில்லையே

கருத்தழிந்து கலங்கவிட்டுச் சென்றனையோ - அம்மா
கதியிழந்து களையிழந்து நிற்கதி யாகினோமே
சிரித்த முகம் சோபையிழந்து சென்றதுவே - இப்போ
சிரிப்பிழந்து செழிப்பிழந்து கற்பூரமானோமே

அன்பையே மழையாக அள்ளிப் பொழிந்தீர் - ஈற்றில்
ஆதரவின்றி அழவிட்டுச் சென்றது ஏனோ?
மனையின்று செயலிழந்து கலங்குதம்மா - உதிர்ந்த
மலர்களாய் மழலைகள் தவிக்குதம்மா

அள்ளியள்ளி அமுதூட்டிய கைகளெங்கே? - தினம்
அன்புமிகப் பகிர்ந்த ஆசைமுகம் எங்கே?
உள்ளிருந்து உவகையூட்டும் சிரிப்பெங்கே? - என்றும்
உணர்வோடு உறவாடிய உடலெங்கே?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லும் குத்த மண்ணும் குத்த - பொய்யுறக்கம்
கல்லறையில் கொண்டது போதுமம்மா
கலங்கி நிற்கும் எமக்கு ஆறுதல்கூறிட - தூக்கம்
கலைந்து எழுந்து வாராயோ அம்மா!

**துயருடன்**
**பிள்ளைகள்**

## புண்பட பேசத் தெரியாது



**இறைவா!**
வீட்டிற்கு விளக்காகி ஒளிதந்தவளை
விதியென்று அணைத்து விட்டாய்
கூட்டுக்கு அரணாய் அமைந்திருந்தவளை
கூறாமல் தகர்த்து விட்டதேனோ?

காட்டிய அன்புப் பிணைப்புகளை
கணத்தினில் மறந்து விட்டாய்
ஈட்டிய புண்ணியங் களனைத்தையும்
புழுதியாய் எண்ணி விட்டதேனோ?

**சகோதரியே!**
பசிமுகம் பார்க்கச் சகிக்காத
பாசமிகக் கொண்ட பச்சைக்கிளியே!
புசி என்றுதானே சொல்வாய்
புன்னகை சிந்தியபடி என்றும்.

'பச்சைக்கிளியாள் பாசமிகு கொண்டாள்
கொச்சைமொழியால் குழந்தையாய் நின்றாள்'
உந்தன் கணவன் என்றோ எழுதியதை
சிந்தாமல் சிதறாமல் கண்டோமே நாம்.

புண்படப் பேசத் தெரியாதுனக்கு
பண்பின் முதலீடானாய் எமக்கு
வாழ்க்கைக்கு வழிகாட்டினாய்
வளமுடன் வாழ்கிறோம் உன்னால்.

**வேதனையுடன்**
**உறவுகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையின் இலக்கணம் நீயம்மா

எம் கலங்கரை விளக்கே! – எமை
கலங்க வைத்ததேனோ – காலனவன்
கனிவற்று போனதேனோ – உம் வாழ்வில்
உறவுகள் நாம் இன்று கதி கலங்கி நிற்கின்றோமம்மா...

புவிதனில் உத்தமியாய் உதித்து – உம்
பதியுடன் பத்தினியாய் வாழ்ந்து – பாரினில்
மூவர் எமக்கு முகவரி தந்தவளே – உம் பிரிவால்
பாசப் பிணைப்புகள் நாம் – வாழ்ந்திடும்
அர்த்தம் புரியவில்லையம்மா...

வாழ்வில் பதறிடும் உளங்களை பாசத்துடன் – அரவணைப்பவளே!
எம் வாழ்வில் பேர் விருட்ச்சமாகி நின்றவளே! – பாசத்தின்
உறைவிடமாம் உனை இன்று இழந்ததனால் – உறவுகள்
நாம் அடைக்கலம் தேடி எங்கு செல்வோமம்மா

தன்னிகரற்ற தலைவியாய் வாழ்ந்து – தம் வாழ்வில்
தனைப்பற்றி சிந்தை கொணராது – எம்
வாழ்வில் ஒளி விளக்காய் திகழ்ந்து – எம்
வாழ்வினை ஒளிரச் செய்தவளே – இன்று உன்
ஒளி விளக்குகள் நாங்கள் அணைந்து நிற்கின்றோமம்மா...



இன்னோர் தாயை கண்டேனம்மா – என்
திருமண பந்தத்தில் அன்று முதல் இன்று வரை
பண்புகளில் சிறந்தவளாய் – என்
சிந்தையில் நிறைந்தவளாய் – எம்
வாழ்வினை பூரிக்க செய்தாயம்மா – இன்று
உந்தன் உன்னத உறவிற்காய் ஏங்கி நிற்கின்றேனம்மா...

காலங்கள் பல கடந்தாலும் – உந்தன்
கனிவான பேச்சு எம் காதுகளில் – ஒலித்து நிற்குமம்மா
வருடங்கள் யுகங்கள் ஆனாலும் – நீங்கள்
எம்முடன் பதித்த பாதச் சுவடுகள் – எம்
மனங்களில் என்றும் – பூரித்து நிற்குமம்மா
தாய்மை உயிரில் கலந்த உன்னத உறவம்மா!
எம் உயிர் என்றும் நீதானம்மா...

**லண்டனில் கலங்கி நிற்கும்**
**ஜெயந்திரன் குடும்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29.05.2010 – பிரசுரங்கள்

## கண்ணீர்த்துளிகள்



**என்னவளே!**
என் மனம் நிறைந்தவளே!
ஏன் பிரிந்தாய் என்னைவிட்டு?
கண் இழந்தவனாய், கை இழந்தவனாய்
மெய் பிளந்தவனாய் தவிக்கிறேன்
என் தவிப்பு, பேதலிப்பு தெரியவில்லையா
தூண்டில் மீனாய் துடிக்கின்றேனம்மா.

மற்றவர் துயர் கண்டு துடிப்பவளே!
உந்தன் செல்வங்கள் கலங்கிக் கதறுகின்றனவே
உணர்வு மேலீட்டால் துடிதுடிக்கின்றனவே
ஏன் இப்போ அடங்கியதோ உந்தன் துடிப்பு?
அணைக்க மறந்ததேன் அணைத்த கைகள்
அனுதினமும் உன் சிந்தையில் அவர்கள்
என்ன தவறு செய்தனர் இம்மண்ணில்
அறுவடை செய்யப்பட்டாயே.

பெண்ணின் ஆறு குணங்களைக் கண்டேன்
கண்ணுறக்கம் என்றுமே கண்டதில்லை
பண்பின் மொத்த வடிவாகக் கண்டேன்
புண்படும் வார்த்தையைக் கேட்டதில்லை
தேடிவந்தோரை வரவேற்கும் உன்பாங்கு
எழுதுவதற்கு என்னிடம் வார்த்தைகளில்லை.

**ஆண்டவா!**
என் குடும்பத்தில் ஒருயிர் வேண்டுமென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனை எடுத்து அவளை விடுத்திருக்கலாமே?
அன்புக்கு அடையாளம் வேண்டுமென்றால்
அவனியில் அவளை வாழவைத்திருக்கலாமே?
மென்குணம் மனிதற்கு உகந்ததென்றால்
மரணம் வராமல் தடுத்திருக்கலாமே?

பூ உதிர்வது நியதியென்றாலும்
புதிது புதிதாய் அது பூக்கின்றதே!
புவியில் நின்று உதிர்ந்த என்னவளை
புதிய பிறப்பாய் திருப்பித் தரமாட்டாயா?

**என்னவளே!**
வரமாட்டாயா? எம்முன் வரமாட்டாயா?
ஒரேயொரு முறையேனும் வரமாட்டாயா?
வரவுக்கு வரம்கேட்டு நிற்கிறோம் அம்மா.
உறவுகளின் வேண்டுதல் வீண்போகாமல்
வருவீர் என்று உறுதியாய் நம்புகின்றோம்
அரவணைக்கும் அன்புத் தெய்வமாக.

தொடுவானில் சுடராக வருவீர்
விடிகாலைப் பொழுதாக வருவீர்
அடிநாத ஒலியாக வருவீர்
இடியாக, காற்றாக வருவீர் - எம்முள்
உயிர்மூச்சாக வருவீர் வருவீர்...



**எம்மவளே!**
வாழ்வினில் பதித்த தடங்கள்
வாழும்வரை எம்முடன் வாழும்...
ஆழமாய்ப் பதிந்த சுவடுகள்
மீளாத நினைவுகளாய் நீளும்...

**ஈரவிழிகளுடன்**
**குடும்பத்தினர்**

"வாழ்ந்தாலும் இறந்தாலும்
நாம் ஆண்டவர்க்கே உரியவர்கள்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மாமா என்று கூப்பிட்டால்
என் மதிப்பு குறைந்திடும் என்றல்லோ
டொக்டர் மாமா என்று
அன்புடன் கூப்பிடுவாய்.
பண்பு நிறைந்த நண்பன்
இராயின் இல்லத்தரசியாக
முப்பத்தி நாலு வருடங்கள்
இல்வாழ்வில் இணைந்துவிட்டு
அவன் முகம் இருளடைய
எம் முகம் சோர்வடைய
எதுவுமே நிகழாத மாதிரி
மீளாத்துயில் கொள்ளும் மாயமென்ன?
கோபத்தை உன்முகத்தில் காண்பதென்றால்
கரடி பிறை கண்ட மாதிரித்தான்.
வஞ்சமில்லாத மனதாலே வாய் நிறைந்த சிரிப்பாலே
உபசரிக்கும் திறத்தாலே
உயர்ந்து நின்ற கோமகளே
எம்மையெல்லாம் விட்டுச்செல்ல
எப்படியம்மா மனம் வந்தது?
நீ மரணிக்கவில்லையம்மா
கண்மூடி உறங்குகிறாய்
இப்படித்தான் எண்ணிக்கொள்வோம்
நீ போகும் வழியில் நாம் இணையும் வரை

**பிரிவால் துயருற்றிருக்கும்**
**சி. மகேஸ்வரனும் குடும்பத்தினரும்**

---

## கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

குடும்ப நண்பர்களாய்
குலாவி மகிழ்ந்தது
பொறுக்க முடியாமலா
காலன் உன் கணக்கை முடித்தான்

என் இல்லாள் சடுதியாய் இறந்திட
அழுது அரற்றி தேற்றுவார் யாருமின்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையறு நிலையில் உறைந்த வேளை
அக்கா...
வயதில் இளையவரானாலும்
அக்கா என்றே அழைத்திடுவேன்
தன் வருத்தம் நோக்காது
உடனோடி வந்து
ஆதரவு மொழி கூறி - அன்புடன்
எனைத் தேற்ற முயன்ற
அக்கா அம்மா ஆகிவிட்டார்.

அக்காவின் உடலில் சத்திர சிகிச்சைகள்
பல செய்திட்ட போதும்
உயிர் காக்க முடியவில்லையே
காலனும் காலமும் செய்துவிட்ட சதியிது

எனைத் தேற்ற ஓடிவந்தாய் - இன்று
உன் பதியைத் தேற்ற நான் ஓடிவர...
ஏன் இவ்வளவு அவசரமோ...?
நீங்காது அக்கா உன்நினைவு
ஆறாது அக்கா எம் நெஞ்சு
நெருப்புடன் நான் இணையும் வரை
மே இருபத்தைந்தை கரிநாள் என்பேன்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**கண்ணீர் விழிகளுடன்**
**லெ. கெங்காதரன் ஆச்சாரியார் குடும்பத்தினர்**
**சிவன் கோவிலடி யாழ்ப்பாணம்.**

---

## கண்ணீர் அஞ்சலி

வாழ்வுதனை முடித்துவிட்டு
எங்கு நீர் சென்றீரோ
உம்மை காணாத உறவுகள்
கலங்கியிங்கு நிற்கின்றார்கள்
அன்னை உன்னை இழந்த - எம்
நண்பன் கதிகலங்கி நிற்கின்றான்
ஆறுதல் கூறி நாமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை உன் ஆன்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**துயருடன்**
**பிரகாஷின் நண்பர்கள்**

---

## கண்ணீர் அஞ்சலி

நீங்கள் மறைந்து போனாலும்
உங்கள் சிரித்த முகமும்
நீங்கள் உதிர்ந்த வார்த்தைகளும்
கண் முன்னே காட்சியாகி
எதிரொலித்து எம் நெஞ்சை பிழிகிறது
காலனவன் உங்களை
பறித்துச் சென்றானே
அழுதாலும் புரண்டாலும் எமது
கண்ணிர் என்றும் ஆறாது.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!



**பிரிவால் துயருற்றிருக்கும்**
**எஸ். விபுலானந்தன் குடும்பத்தினர்**
**தெகிவளை.**

---

## கண்ணீர் அஞ்சலி

கண்ணெனச் சுற்றத்தை நேசித்து
கனிவாய் வாழ்ந்திருந்தீர்
உற்றார் உறவினரைப் பேணி
உள்ளன்பு காட்டி இனிதாய் வாழ்ந்து
இரண்டாயிரத்துப் பத்தில் உயிரை
விட்டுச்செல்லும் உத்தமியே உமை
எண்ணி எல்லோரும் கலங்குகிறோம்.
அவர்களின் மறைவையிட்டு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**விவியனின் நண்பர்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வாழ்ந்தது காணும் என்று நீரும்
உறவுகளை விட்டுச் சென்றீரோ
காலத்தால் அழியாத நினைவுகளை
சுமந்து உம் உறவுகள் இங்கு துடிக்கிறார்கள்
அன்னை உம்மை இழந்த - என்
நண்பன் கதிகலங்கி நிற்கின்றான்
ஆறுதல் கூறிட வார்த்தைகள் இல்லை.
அன்னை உன் ஆன்மா சாந்தியடைய
இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

**துயருடன்**
**பிரகாஷின் நண்பன் செல்ரன்**

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு நண்பர்களான கு.இராயப்பு
(கலைப்பார்வை) அவர்களின் அன்புத் துணைவியாரும்
றோமான் பிலிப்போ அவர்களின் அன்புச் சகோதரியுமான

**திருமதி இராயப்பு லூர்துநாயகி**

அவர்களின் மறைவால் ஆறாத் துயரடைந்துள்ளோம்.
இவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவனைப்
பிரார்த்தித்துப் பிரிவால் கலங்கித் தவிக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(வி-587994) நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றியெனும் நன்னெறி நவிலல்

## இதயம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்பத்தின் அன்புச் சுடராக விளங்கி, 25.05. 2010 இல் இறையடி எய்திய, குருநகரைப் பிறப்பிடமாகவும், மாட்டின் வீதியை வசிப்பிட மாகவுங்கொண்ட **திருமதி இராயப்பு லூர்துநாயகி** அவர்களின்;



- இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள்,
- இறுதிச் சடங்கின்போது பக்கமிருந்து உதவிபுரிந்தவர்கள்,
- உடன் ஓடிவந்து உதவிகள் பல செய்தவர்கள்,
- வேதனையில் எம்மோடு விம்மிய உற்றார் - உறவினர் - நண்பர்கள்,
- நேரில் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்கள்,
- தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்துகொண்டவர்கள்,
- தெய்வமாகிவிட்டவளை தரிசிக்க வந்தவர்கள்,
- மலர்வளையம் - மலர்மாலை மூலம் மரியாதை செலுத்தியவர்கள்,
- வழிபாடு - பிரார்த்தனைகளை நிகழ்த்தியவர்கள்,
- இரங்கல் செய்தி அனுப்பி வைத்தவர்கள்,
- ஊடகங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள்,
- கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்கள்,
- வருகைதந்த கத்தோலிக்க குருமார்கள், அருள் சகோதரிகள்.
- திருப்பலி மற்றும் வழிபாட்டை நிகழ்த்திய குருமார்கள்,
- தினமும் உணவுகொடுத்து ஆதரவு வழங்கியவர்கள்,

மற்றும் பலவகையிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களினதும் கரங்களை நன்றியுணர்வுடன் பற்றிக் கொண்டு, நெஞ்சுருகி வழிந்தோடும் கண்ணீரின் மத்தியில் இதயம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிப்பதுடன் குறையேதும் நிகழ்ந்திருப்பின் மன்னிக்குமாறும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

*28, மாட்டின் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

"செய்யாமல் செய்த உதவிக்கு
வையகமும் வானகமும் ஆற்றல் அரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயந்த் சென்ரர்